நிலைமை கட்டுக்குள் அடங்கியுள்ளது. இப்போது அஞ்சுவதற்குக் காரணம் எதுவுமில்லை.

திருச்சிராப்பள்ளி மாவட்டம்:

திருச்சிராப்பள்ளி மாவட்டத்திலுள்ள பெரம்பலூர், வேப்பந்தட்டை மற்றும் திருமானூர் வட்டாரங்களில் (Blocks) 20—1—1974-ஆம் நாள் வரை 78 பேர்களுக்குக் காலரா மற்றும் குடற்காய்ச்சல் நோய் ஏற்பட்டதாக அறிவிக்கப்பட்டது. அவர்களில் 10 பேர் இறந்தனர். திருச்சிராப்பள்ளியிலுள்ள அரசு தலைமையிட மருத்துவமனையில் 24—1—1974-ஆம் நாள் வரை குடற்காய்ச்சல் நோயால் வாடிய 209 பேர் சேர்க்கப்பட்டுச் சிகிச்சையளிக்கப் பட்டனர்.

மொத்தம் 22 பேர்களின் மலம் ஆய்வுக்கு அனுப்பப்பட்டது. அதில் 5 பேர்களின் மலத்தில் காலரா நோயணுக்கள் இருந்தனவென்றும் மூவரின் மலத்தில் காலரா நோயணுக்கள் இல்லையென்றும் அறிவிக்கப்பட்டது. மீதமுள்ளவர்களின் மல ஆய்வின் முடிவுகள் எதிர்பார்க்கப்படுகின்றன.

மாவட்டத்தில் இதுவரை 24,444 பேர்களுக்குக் காலராத் தடுப்பு ஊசி குத்தப்பட்டுள்ளது.

நிலைமை கட்டுக்குள் அடங்கியிருக்குமாறு தொடர்ந்து முயற்சி எடுக்கப் பட்டு வருகிறது.

(5) அறிக்கை அளித்தல்.

வனத்துறை, தமிழ்நாடு மின்வாரியம் ஆகியவை குறித்த மதிப்பீட்டுக் குழுவின் பரிந்துரைகள் மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை குறித்து அறிக்கை.

THIRU V. KRISHNAMOORTHI: Mr. Speaker, Sir, I rise to present the Reports of the Committee on Estimates on the action taken by the Government on the recommendations of the Committee contained in the Reports on (i) Forests and (ii) Tamil Nadu State Electricity Board.